நகைக் கடையில் ரூ.1 கோடி கேட்டு மிரட்டல்: பி.எம்.டி. கட்சித் தலைவர் கைது

தூத்துக்குடியில் நீதிமன்றம் முன் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்ட பசும்பொன் மக்கள் தேசம் கட்சி ஆதரவாளர்கள்.

தூத்துக்குடி, செப். 22: தூத்துக்குடியில் நகைக் கடை உரிமையாளரிடம் ரூ. 1 கோடி கேட்டு கொலை மிரட்டல் விடுத்ததாக பசும்பொன் மக்கள் தேசம் (பி.எம்.டி.) கட்சித் தலைவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார். தகவல் அறிந்ததும் அவரது ஆதரவாளர்கள் தென்பாகம் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு, சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தூத்துக்குடி 3-ஆவது மைல் பகுதியைச் சேர்ந்தவர் இசக்கிராஜா (46). பசும்பொன் மக்கள் தேசம் கட்சி நிறுவனர்- தலைவர். தூத்துக்குடியில் உள்ள பிரபல நகைக் கடையில் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் தான் வாங்கிய நகையில் உலோகம் அதிகம் கலந்திருப்பதாகக் கூறி அண்மையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தார்.

இந்த விவகாரத்தில், நகை வாங்கியவருக்கு ஆதரவாக இசக்கிராஜா அந்தக் கடை உரிமையாளரிடம் பேசி நகைக்காக ரூ.4.22 லட்சம் பெற்றதோடு கடை குறித்து அவதூறாக செய்திகள் பரப்பி மேலும் ரூ.1 கோடி கேட்டுக் கொலை மிரட்டல் விடுத்தாராம்.

இதுகுறித்து கடை உரிமையாளர் தென்பாகம் காவல் நிலையம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தார். தூத்துக்குடி மாவட்ட வணிகர்கள் சங்கமும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தது.

அதன்பேரில், தென்பாகம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து காவல் ஆய்வாளர் திருமுருகன் தலைமையில் செவ்வாய்க்கிழமை இசக்கிராஜாவின் வீட்டுக்குச் சென்று அவரைக் கைது செய்தனர்.

காவல் நிலையம் முற்றுகை: தகவலறிந்த பசும்பொன் மக்கள் தேசம் கட்சி நிர்வாகிகள், ஆதரவாளர்கள் தென்பாகம் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். இதையடுத்து, காவல் நிலையத்தின் பிரதான நுழைவாயில் மூடப்பட்டு, துப்பாக்கி ஏந்திய போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்; ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டனர்.

பின்னர், மருத்துவப் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு போலீஸார் இசக்கிராஜாவை அழைத்துச் சென்றபோது அவரது ஆதரவாளர்கள் காவல் வாகனத்தை மறித்து முழக்கம் எழுப்பினர். அப்போது போலீஸாருக்கும், ஆதரவாளர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பின்னர், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1-இல் நீதிபதி சுமதி முன் இசக்கிராஜா முன்னிலைப்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி வரும் அக். 6-ஆம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து அவர், மதுரை மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மறியல்: இதற்கிடையே இசக்கி ராஜா மீது போலீஸார் பொய் வழக்குப் பதிவு செய்ததாகக் கூறி, தூத்துக்குடி-பாளையங்கோட்டை சாலையில் நீதிமன்றம் முன் அவரது ஆதரவாளர்கள் மறியலில் ஈடுபட்டனர். போலீஸார் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை,
சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050.

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A வின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது, கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு/திருமதி சங்கீதா S C/o.திரு/திருமதி செந்தில்குமார் திரு/திருமதி செந்தில்குமார S C/o.திரு/திருமதி சக்கரவர்த்தி இருவரின் முகவரி: எண் 111(1) வடக்குத் தெரு, கோலையனூர், உள்ளியக்குடி, அரியலூர், தமிழ்நாடு, 621701	அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கொல்லையனூர் கிராமம், உள்ளியக்குடி மதுரா-இல் அமைந்துள்ள, சர்வே எண்-99/5A-இல் உள்ள 700 சதுர மீட்டர் / 7532 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்-விக்னேஷ் சொத்து, தெற்கில்-செந்தில்குமார் சொத்து, கிழக்கில்-செந்தில்குமார் சொத்து, மேற்கில்- வண்டிப்பாதை.	ரூ.24,43,000/- ரூ.2,44,300/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETRPPA0449873 / 200002281978 17.11.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.11,25,468/- மேலும் 18.11.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.13,85,377/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ்குமார் 9940286237, ஆண்டனி மரியா வியோ 9715386558, சந்துரு 9629121731				
திரு/திருமதி தேவேந்திரன் G C/o.திரு/திருமதி கோவிந்தம் திரு/திருமதி மகாலட்சுமி D C/o.திரு/திருமதி தேவேந்திரன் இருவரின் முகவரி: 4/25 செதலவாடி சிறுகடம்பர், செந்துறை தாலுக்கா, பிலாக்குறிச்சி, அரியலூர், தமிழ்நாடு, 621806	அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், பிலாக்குறிச்சி மதுரா, சேதலவடி கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண் 69/8B - இல் உள்ள 3230 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: (வடக்கில்)- வண்டிப் பாதை, (தெற்கில்)- திரு.முருகேசனின் சொத்து, (கிழக்கில்)- திரு.கொளஞ்சியின் சொத்து, (மேற்கில்)- திரு.கனேசனின் சொத்து.	ரூ.5,57,000/- ரூ.55,700/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEKUMBI0424491 10.07.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.4,31,382/- மேலும் 11.07.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.6,51,340/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ்குமார் 9940286237, கலையரசன்.K 9789554821, சந்துரு 9629121731				
Vamauzu Industrial Valves India Pvt Ltd குமாரவேல், அசோக் K அனைவரின் முகவரி: 6314, ராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, தமிழ்நாடு - 622002	புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வெள்ளனூர் கிராமத்தில் அமைந்துள்ள புதுக்கோட்டை (சிப்காட்) தொழிற்பேட்டையில் உள்ள பட்டா எண் 2442 மற்றும் சர்வே எண் 315/1B - இல் அடங்கிய 600 சதுர மீட்டர் பரப்பளவுள்ள (6456 சதுர அடிக்குச் சமமான) மனை எண் 62- உடன் நிலம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.34,62,000/- ரூ.3,46,200/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEPUDKT0460448 / 200002450040 17.11.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.23,43,873/- மேலும் 18.11.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.27,61,374/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, அருள்குமார் .C 9626499251, நேதாஜி 9865479405				
திரு/திருமதி முத்துலட்சுமி S C/o.திரு/திருமதி செல்வகுமார் திரு/திருமதி சின்னரசு S C/o.திரு/திருமதி செல்வகுமார் இருவரின் முகவரி: எண் 83 சுப்பிரமணியன் நகர் மருப்பாணி சாலை, புதுக்கோட்டை, தமிழ்நாடு, 622001	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை தெற்கு கிராமம், புதுக்கோட்டை நகரில் அமைந்துள்ள, பழைய R. சர்வே எண்.213/2, புதிய T. சர்வே எண்.9922/2 மற்றும் T. சர்வே எண்.9922/3 ஆகியவற்றில் அடங்கிய 2400 சதுர அடி, 222.97 சதுர மீட்டர், 5.5 சென்ட் பரப்பளவுள்ள, மனை எண்.83-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.60,00,000/- ரூ.6,00,000/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEKKUDI0408503 / 200001961281 18.12.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.14,30,591/- மேலும் 19.12.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.14,22,704/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, அருண்குமார் 9629798038, ராஜசேகரன் T 9952200953				
அடோல்ஃப் ஹிட்லர் மணிமேகலை H அனஷ்ட்ராஜ் J அனைவரின் முகவரி: 63/2, மிஷின் தெரு, எலுமிசங்காபாளையம், தாராசுரம் SO-திருச்சி, தமிழ்நாடு - 612702	தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், தாராசுரம் கிராமம், மிஷின் தெருவில் அமைந்துள்ள பழைய சர்வே எண் 170/9 பகுதி, புதிய சர்வே எண் 170/9B இல் உள்ள 1614 சதுர அடி. நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.12,92,000/- ரூ.1,29,200/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700008758954 10.07.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.11,74,157/- மேலும் 11.07.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.9,69,391/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ்குமார் 9940286237, சண்முகநாதன் 9629121731, சந்துரு 9629121731				
பேரவக்கல் G கனகராஜ் A இருவரின் முகவரி: 1 76, கம்பளியம்பட்டி, கொசூர், கடவூர், மாதகிரி BO-திருச்சி, தமிழ்நாடு - 621313	கரூர் பதிவு மாவட்டம், தாரகம்பட்டி துணைப் பதிவு மாவட்டத்திற்குட்ட கரூர் மாவட்டம், கொசூர் கிராமம், கடவூர் வட்டம், சர்வே எண் 385/52-ல் அடங்கிய 1884 சதுர அடி (175 சதுர மீட்டருக்குச் சமம்) பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.3,47,000/- ரூ.34,700/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009137289 16.07.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.2,83,649/- மேலும் 17.07.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.4,34,111/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, A.சுரேந்தர் 7305232117, ராஜசேகரன் T 9952200953				
திரு/திருமதி முருகபாண்டியன் R. C/o. திரு/திருமதி ராமச்சந்திரன் திரு/திருமதி மரியம்மாள் P C/o.திரு/திருமதி முருகபாண்டியன் இருவரின் முகவரி: 3/35E, பிள்ளையார்கோவில் தெரு, ஸ்ரீபுரந்தன் போஸ்ட், உடையார்பாளையம், அரியலூர், தமிழ்நாடு, 621701	அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கோவிந்தபுத்தூர் மதுரா, குமாரைத்துறை கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண் 148/7-இல் உள்ள, 6461 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: (வடக்கில்)- சாலை, (தெற்கில்)- திரு. ராமசாமியின் சொத்து, (கிழக்கில்)- திருமதி. வசந்தியின் சொத்து, (மேற்கில்)- திரு. நடேசனின் சொத்து.	ரூ.27,15,000/- ரூ.2,71,500/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEKBMII0434907 / 200002071777 30.10.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.14,41,064/- மேலும் 31.10.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.17,56,135/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ்குமார் 9940286237, சண்முகநாதன் 9629121731, சந்துரு 9629121731				
ஜெயசத்ய விஜய் விஜய் இருவரின் முகவரி: 278, குடிகாடு அம்பலப்பட்டு தெற்கு, தஞ்சாவூர், தமிழ்நாடு - 614626	பட்டுக்கோட்டைப் பதிவு மாவட்டம், பாப்பநாடு துணைப் பதிவு மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், அம்பலப்பட்டு தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண் 614/12A1-ல் உள்ள, 4142 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.12,74,000/- ரூ.1,27,500/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009312717 / 200002545735 12.04.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.13,08,505/- மேலும் 13.04.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.17,74,811-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, விக்னேஷ் 9626961507, தீபன் 9942739202				
மணிகண்டன் லக்ஷமிதா இருவரின் முகவரி: 1/2_86, சருகை கலைனி தெரு, கருப்பூர் சருக்கை தஞ்சாவூர், தமிழ்நாடு - 614203	தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், வடசாருக்கை சருக்கை கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண் 140/5 பகுதி மற்றும் NS எண் 140/10-ஐ உள்ளடக்கிய 1345 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: (வடக்கில்)- சர்வே எண் 140/9 திரு. பரமசிவம் வீடு மற்றும் கொல்லைப்புறம் (தெற்கில்)- சர்வே எண் 140/11 திரு. ராஜேந்திரன் சொத்து (கிழக்கில்)- தெருப்பாதை (மேற்கில்)- திரு. சண்முகம் நஞ்சை	ரூ.15,43,000/- ரூ.1,54,300/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEIYPET0467292 / 200001993165 14.07.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.15,05,277/- மேலும் 15.07.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.19,81,281-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434 , தீபன் 9942739202				
முத்தரசு, S/o.கண்ணன், கண்ணன் K, S/o.கண்ணன், ரஞ்சிதா M, S/o.கண்ணன், (அனைவரின் முகவரி: 170/1, பிராமணவயல் அஞ்சல், புதுக்கோட்டை, தமிழ்நாடு - 614630	புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோபாலபுரம் கிராமத்தில் அமைந்துள்ள, பழைய சர்வே எண் 20/2 மற்றும் புதிய சர்வே எண் 20/8 ஆகியவற்றை உள்ளடக்கிய, கட்டிடத்துடன் கூடிய 1308 சதுர அடி (3 சென்ட்) நிலம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.7,80,000/- ரூ.78,000/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009806735 19.08.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.7,04,103/- மேலும் 20.08.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.9,66,582-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434 , அருள்குமார் C - 9626499251, நேதாஜி - 9865479405				
திரு/திருமதி விஜயராஜ் சீனிவாசன் திரு/திருமதி மங்கத்தாயி இருவரின் முகவரி: 40/22 பர்மா காலனி, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு - 620005	கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், ஆலத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள, அயன் நஞ்சை சர்வே எண் 203/2, புதிய சர்வே எண் 203/2B ஆகியவற்றில் உள்ள, 7623 சதுர அடி அல்லது 17.50 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: (வடக்கில்)- பாதை (தெற்கில்)- சாந்தி, யாமினி சொத்து (கிழக்கில்)- பாதை (மேற்கில்)- சர்வே எண்203/1 கொண்ட சொத்து.	ரூ.15,07,000/- ரூ.1,50,700/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SELLGDI0466835 / 600000034133 17.04.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.12,33,610/- மேலும் 18.04.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.13,74,509-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் குமார் 9940286237, ஜான் சேவியர் 6383414800, பாஸ்கரன் 7598239524				
திரு. சிவராமன் K C/o. திரு கருப்பையா திரு. கருப்பையா C C/o. திரு. சிதம்பரம் திரு. செல்வம் K C/o. திரு கருப்பையா அனைவரின் முகவரி: எண்: 6/293 சிதம்பரவிடுதி மேற்கு, கொத்தமங்கலம், புதுக்கோட்டை, தமிழ்நாடு, 614624	புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கோதமங்கலம் வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண் 47/1B 1 - ல் அடங்கிய 4479 சதுர அடி பரப்பளவுள்ள நிலம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: (வடக்கில்)- திருமதி. சமரகொடிக்குச் சொந்தமான புஞ்சை நிலம் (தெற்கில்)- திரு. கருப்பையாவுக்குச் சொந்தமான புஞ்சை நிலம் (கிழக்கில்)- திரு. ராஜேந்திரனுக்குச் சொந்தமான சொத்து (மேற்கில்)- தார் சாலை.	ரூ.10,04,000/- ரூ.1,00,400/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEPUDKT0384804 / 200002323695 05.12.2024 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.6,62,966/- மேலும் 06.12.2024 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.11,20,476-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, அருள்குமார் .சி 9626499251, நேதாஜி 9865479405				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 26.10.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www. Equitasbank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

ஆறுகள், கால்வாய்களை உடனடியாக சீரமைக்க வேண்டும்

அரசுக்கு எல் நினோ நிபுணர் குழு பரிந்துரை

சென்னை, செப். 22: நீர்வளத் துறையின் கீழ் உள்ள முக்கிய ஆறுகள், கால்வாய்களை உடனடியாக சீரமைக்க வேண்டும் என்று தமிழக அரசால் நியமிக்கப்பட்ட எல் நினோ நிபுணர் ஆலோசனைக் குழு அளித்துள்ள முதல்கட்ட பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல் நினோ காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை ஆராய்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தின் தலைவர் பாலாஜி நரசிம்மன் தலைமையில் 7 பேர் கொண்ட நிபுணர் குழுவை தமிழக அரசு கடந்த ஜூலை மாதம் அமைத்தது.

இந்தக் குழு குறுகிய காலம் 2026 வடகிழக்கு பருவமழைக்கு முன், நடுத்தர காலம் -2027 கோடைகாலத்துக்கு முன், நீண்ட காலம் அடுத்த 3-5 ஆண்டுகளுக்குள் என 3 செயலாக்க காலங்களில் பல்வேறு துறைகளின் கீழ் பரிந்துரைகளை அளித்துள்ளது. முதல்வர் விஜய்யிடம் இந்த அறிக்கை திங்கள்கிழமை (செப்.21) அளிக்கப்பட்டது.

அதன் விவரம்: நீர்வளத் துறையின் கீழ் உள்ள முக்கிய ஆறுகள், கால்வாய்கள், நீர்வழிகள், வெளியேற்ற வாயில்கள், குளங்கள், மதகுகள், வெள்ளத் தடுப்புகள், அணைகள் மற்றும் கரைக்கட்டுகளில் அவசரகால சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆறுகள், கால்வாய்கள் மற்றும் முக்கிய வடிகால்களில் தேங்கியுள்ள வண்டல் மற்றும் குப்பைகளை அகற்ற வேண்டும் என குறுகிய கால பரிந்துரையாக அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையில் குறுகிய கால நடவடிக்கையாக, வடகிழக்கு பருவமழை காலத்தில் உரிய நேரத்தில் விதைப்பு மேற்கொள்வதையும், போதுமான விதைகள் கிடைப்பதையும் உறுதி செய்ய வேண்டும், பயிர் இழப்புக்கு எதிரான மானியத்துடன் கூடிய பயிர் காப்பீட்டுத் திட்டங்களை ஊக்குவிக்க வேண்டும்.

இடைக்கால நடவடிக்கையாக, பயிர் முறை மாற்றங்களையும், நீர் சிக்கனம், குறுகிய கால, வெப்பம் மற்றும் வறட்சியைத் தாங்கும் ரகங்களையும் ஊக்குவிக்க வேண்டும்; இலக்கு வைக்கப்பட்ட ஊக்கத் தொகைகள் மூலம் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களைக் குறைத்தல் வேண்டும்.

சுகாதாரத் துறையில் குறுகிய கால நடவடிக்கையாக, டெங்கு, மலேரியா. லெப்டோஸ்பைரோசிஸ், வயிற்றுப்போக்கு நோய்களுக்கான கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும்; அத்தியாவசிய மருந்துகளை இருப்பு வைத்திருத்தல், வெள்ளத்துக்குப் பிந்தைய காலக்கட்டத்தில் நோய்க் கண்காணிப்புக்கான திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

நடுத்தர கால நடவடிக்கையாக, வெப்பச் செயல் திட்ட நடவடிக்கைகளை உச்ச கட்ட கோடைக்காலத்தைத் தாண்டியும் நீட்டித்தல் மற்றும் நீண்ட கால அடிப்படையில், காலநிலை மற்றும் சுகாதாரம் சார்ந்த கண்காணிப்பு முறை மற்றும் பேரிடர் தொடர்பான தரவுத்தளத்தை உருவாக்கி பகிர்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர்கள் பணி மூப்பு அரசாணை விரைவில் வெளியீடு

தஞ்சாவூர், செப். 22: கல்லூரி பேராசிரியர்கள் பணி மூப்பு பலன் தொடர்பான அரசாணை விரைவில் வெளியிடப்படும் என்றார் உயர் கல்வித் துறை அமைச்சர் பி. விஸ்வநாதன்.

தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உள்ளகக் குழுவினருக்கான பயிற்சி தொடக்க விழாவில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியது: கல்லூரி பேராசிரியர்கள் பணி மூப்பு பலன் தொடர்பாக கடந்த 6 ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வந்தனர். இந்த 6 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாத இக்கோரிக்கையை தமிழக முதல்வர் உடனடியாக நிறைவேற்றுவதாக அறிவிப்பு வெளியிட்டார்.

இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும். தமிழகத்தில் 9 ஆயிரம் விரிவுரையாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதற்கு 42 ஆயிரம் பேர் விண்ணப்பித்த நிலையில், 27 ஆயிரம் பேர் தேர்ச்சி பெற்றனர். இவர்களில் 2 ஆயிரத்து 708 பேர் நியமிக்கப்படவுள்ளனர்.

அடுத்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் இரு தேர்வுகள் நடத்தி, 2 ஆண்டுகளுக்குள் தலா 3 ஆயிரம் பேர் வீதம் அனைத்து விரிவுரையாளர் காலிப் பணியிடங்களும் நிரப்பப்படும். துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பாக ஆளுநருக்கும், முதல்வருக்கும் இடையேயான பேச்சுவார்த்தை சுமூகமாக உள்ளது. எனவே, துணைவேந்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றார் அமைச்சர் விஸ்வநாதன்.

விழாவில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத் துணைத் தலைவர் எம்.பி. விஜயகுமார், தொழில்நுட்பக் கல்வி இயக்கக இயக்குநர் ரத்தினசாமி, தஞ்சாவூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் இரா. விஜய் சரவணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கல்லூரிக் கல்வி முன்னதாக, மண்டல இணை இயக்குநர் ஏ. குணசேகரன் வரவேற்றார். நிறைவாக, கல்லூரி முதல்வர் து. ரோசி நன்றி கூறினார்.

அமைச்சர் பேசியபோது மின் தடை

விழாவில் அமைச்சர் விஸ்வநாதன் பேசத் தொடங்கிய 10-ஆவது நிமிஷத்தில் மின் தடை ஏற்பட்டது. அப்பகுதியிலுள்ள மின்மாற்றியில் திடீர் பழுது காரணமாக மின் விநியோகம் தடைபட்டதாகக் கூறப்படுகிறது. இதனிடையே, அருகே இருந்த ஜெனரேட்டரை இயக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஜெனரேட்டர் இயங்கினாலும், விழா அரங்குக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை. இதனால், ஒலிபெருக்கி செயல்படாத நிலையிலும், அமைச்சர் தொடர்ந்து 8 நிமிஷங்கள் பேசி நிறைவு செய்தார். அதன் பின்னர் மின்சாரம் வந்தது.

மனைவியைக் கொன்ற கணவருக்கு 6 ஆண்டுகள் சிறை

தஞ்சாவூர், செப். 22: குடும்பத் தகராறில் மனைவியைக் கொலை செய்த கணவருக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தஞ்சாவூர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

தஞ்சாவூர் மாவட்டம், பாப்பாநாடு அருகே ஆம்பலாபட்டு வடக்குத் தெருவைச் சேர்ந்தவர் ஏ. இளையராஜா (43). வேலைக்கு செல்லாமல் காலத்தைக் கழித்த இவருக்கும், இவரது மனைவி சங்கீதாவுக்கும் 2020, பிப். 9- ஆம் தேதி குடும்பத் தகராறு ஏற்பட்டது. இதில், சங்கீதாவை இளையராஜா கத்திரிக்கோலால் குத்தினார். இதனால், பலத்த காயமடைந்த சங்கீதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு உயிரிழந்தார்.

இதுகுறித்து பாப்பாநாடு காவல் நிலையத்தினர் வழக்குப் பதிந்து இளையராஜாவை கைது செய்தனர். இது தொடர்பாக தஞ்சாவூர் மகிளா நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி ஏ. தீபா விசாரித்து இளையராஜாவுக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து, செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் திறம்பட பணியாற்றிய காவல் ஆய்வாளர் நாகரத்தினம், அரசு வழக்குரைஞர் சுகன்யாவை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஏ. சுந்தரவதனம் பாராட்டினார்.

மர்மமான முறையில் இறந்த மாணவரின் உடல் 16 நாள்களுக்குப் பிறகு ஒப்படைப்பு

மதுரை, செப். 22: மதுரையில் மர்மமான முறையில் உயிரிழந்த பள்ளி மாணவரின் உடல் 16 நாள்களுக்குப் பிறகு அவரது பெற்றோர், உறவினர்களிடம் செவ்வாய்க்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

மதுரை ஆனையூர் வள்ளலார் தெருவைச் சேர்ந்த கருப்புசாமி மகன் தமிழ்ச்செல்வன் (16). இவர் அதே பகுதியில் உள்ள பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்தார். இவர், கடந்த செப்.7-ஆம் தேதி அதே பகுதியில் உள்ள நீர்நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். கூறாய்வுக்குப் பிறகு, இவரது உடல் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டது.

இதுகுறித்து கூடல்புதூர் போலீஸார் சந்தேக மரண வழக்காகப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில், மாணவரின் மரணத்தை கொலை வழக்காக மாற்ற வேண்டும். வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தி, உடலை வாங்க மறுத்து பெற்றோர், உறவினர்கள், போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனிடையே, இந்த வழக்கை சிபிசிஐடிக்கு மாற்ற உத்தரவிடக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. இதையடுத்து, குடும்பச் சூழல் காரணமாக, மாணவரின் உடலை வாங்க சம்மதம் தெரிவித்து காவல் துறையினரிடம் கடிதம் வழங்கப்பட்டது.

இதன்படி, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டிருந்த மாணவர் தமிழ்ச்செல்வனின் உடல் அவரது பெற்றோர், உறவினர்களிடம் செவ்வாய்க்கிழமை ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து உடலை பாளையம் கிராமத்துக்கு எடுத்துச் சென்றனர்.

திருச்சி அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்ய உத்தரவு

மதுரை, செப்.22: திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையின் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் ஆகியோர் ஆய்வு செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

திருச்சி மாவட்டம், தொட்டியத்தைச் சேர்ந்த ஜெயஸ்ரீ சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் திருச்சி சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த மருத்துவமனையில் தற்போது சுகாதாரம், நோயாளிகள் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, பொதுப் பராமரிப்பு ஆகியவற்றில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன.

இந்த நிலையில், கால் முறிவு அறுவைச் சிகிச்சைக்குப் பின் பொது வார்டில் சிகிச்சையிலிருந்த மூதாட்டியின் கால் பெருவிரலில் எலி கடித்தது. பொது வார்டில் எலிகள் நடமாட்டம் இருப்பது குறித்து மூதாட்டியின் மகன் மூன்று நாள்களுக்கு முன்னதாகவே மருத்துவமனை நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கவில்லை. புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காதது மருத்துவமனையில் பாதுகாப்பான, சுகாதாரமான சிகிச்சைச் சூழலைப் பராமரிப்பதில் ஏற்பட்ட தோல்வியைக் காட்டுகிறது.

எனவே, தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துமனையில் சுகாதாரம், நோயாளிகளின் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, பொதுப் பராமரிப்பு தொடர்பாக நிரந்தர நடவடிக்கை எடுக்கவும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது எலி கடித்த மூதாட்டிக்கு இழப்பீடு வழங்கவும் உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், ஆர். சக்திவேல் அமர்வு முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

இந்த மனு தொடர்பாக திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையின் முதன்மையர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், திருச்சி மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் ஆகியோர் இணைந்து அரசு மருத்துவமனையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தொடர்பாக ஆய்வு செய்யவும், பாதிக்கப்பட்ட மூதாட்டிக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும் முடிவு செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். வழக்கு விசாரணை வருகிற அக்.15-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

மது அருந்தும் கூடம் அமைக்க எதிர்ப்பு: சாலை மறியல்

.மணப்பாறை, செப். 22: திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே நவக்கிணத்துப்பட்டியில் தனியார் மது அருந்தும் கூடம் (பார்) அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதியினர் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

நல்லாம்பிள்ளை கிராமம், நவக்கிணத்துப்பட்டியில் பார் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

இங்கு பார் அமைப்பதால், பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்படுவர் என்று கூறியும், இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அமையபுரம், நல்லாம்பிள்ளை, நவக்கிணத்துப்பட்டி 3 சாலை பகுதியில் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் அந்த வழியில் போக்குவரத்து முடங்கியது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போலீஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அங்கு வந்த வருவாய் ஆய்வாளர் அருள்தாஸ், கிராம நிர்வாக அலுவலர் பாண்டி ஆகியோர் பொதுமக்களிடம் பேசி, இதுகுறித்து ஆட்சியருக்கு தகவல் அனுப்புவதாக உறுதி அளித்ததையடுத்து, மறியல் கைவிடப்பட்டது.